அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 10 / 2018
தேதி : 20.01.2018

**போக்குவரத்து கழக நிர்வாக செலவுகளை குறைக்க வேண்டும்.**
**பயணிகள் கட்டண உயர்வை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ரா.சரத்குமார் வலியுறுத்தல்.**

ஊழியர்களின் சம்பள உயர்வு, ஓய்வூதியம், பராமரிப்பு செலவுகள் மற்றும் நிர்வாகச் செலவின் அதிகரிப்பு, பல ஆண்டு காலமாக நீடித்து வரும் தொடர் நஷ்டம், கடன்சுமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அரசு பேருந்து கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறது. எனவே ஒருபுறம் பேருந்து கட்டண அதிகரிப்பு தவிர்க்க முடியாது என்றாலும், 6 ஆண்டு காலத்திற்கு பிறகு இவ்வளவு அதிகமாக உயர்த்தியிருப்பதை தவிர்த்திருக்கலாம்.

போக்குவரத்துக் கழகங்களின் மூலம் கிடைக்கும் வருவாயில் 44 சதவீதம் ஊழியர்களின் ஊதியத்திற்கே சென்று விடுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பிற மாநிலங்களில் அந்தந்த மாநில அரசு போக்குவரத்து நிறுவனம் என்ற ஒரே அமைப்பு தான் இருக்கும். ஆனால், தமிழகத்தில் 8 போக்குவரத்து கழகங்கள் அதற்கு நிர்வாக இயக்குனர்கள், பொது மேலாளர்கள், உதவி பொது மேலாளர்கள் என்று பதவிகளின் எண்ணிக்கை அதிக அளவில் இருப்பதோடு அவர்களுக்கான ஊதியமாக, கணிசமான தொகை செலவிடப்படுகிறது.

மேலும், டீசல் மீதான வரியும், பேருந்துகளுக்கான சுங்கக் கட்டணம் என்ற வகையில் ஆண்டுக்கு 2000 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிறது. அதுமட்டுமல்லாமல், பராமரிப்பு செலவுகள், டயர்கள் உள்ளிட்ட உதிரி பாகங்கள் வாங்குவதில் முறைகேடுகள் என்ற வகையிலும் வருவாயிலிருந்து பெரும் அளவு விரையம் ஏற்பட்டு நஷ்டம் ஏற்படுகிறது.

போக்குவரத்து கழகங்கள் நஷ்டத்தில் இயங்கினாலும் சுமார் 40 லட்சம் மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ், மாற்றுத் திறனாளிகள், மூத்த குடிமக்களுக்கான பயண சலுகைகள் என்ற மகத்தான சேவையையும் அரசு வழங்கிவருகிறது.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அரசு போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாக சீரமைப்பு மற்றும் வரவு, செலவு கணக்கில் தீவிர கண்காணிப்பு மூலமாக பல ஆயிரம் கோடி ரூபாய் மிச்சப்படுத்தி நஷ்டத்தை தவிர்த்திருக்க வேண்டும். மேலும், பல்வேறு பெயர்களில் உள்ள போக்குவரத்து கழகங்களை ஒரே நிறுவனமாக மாற்றுவதன் மூலமும் நிர்வாகச் செலவுகளை வெகுவாக குறைக்கலாம் என்பதை இத்தருணத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

டீசல் விலையை மத்திய அரசு கணிசமாக அதிகரித்துக் கொண்டே போவதும், அனைத்து மாநிலங்களிலும் உள்ள அரசு போக்குவரத்து நிறுவனங்களுக்கு வரம்பற்ற செலவுகளை அதிகரித்து கொண்டே போகும். எனவே, மத்திய அரசு,மாநில அரசு போக்குவரத்து நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் டீசல் வழங்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும். மேலும், சுங்கச்சாவடிகளில் அரசு பேருந்துகளுக்கு சுங்கக் கட்டணத்திலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன்.

தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் பேருந்து கட்டணங்களை தமிழக அரசு, மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதையும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com